கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்) தென்காசி

முன்னிலை:- திருமதி.கோ. அனுராதா, L.L.M., M.L.S.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.

2022 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 17 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.34/2021**

( CNR No.TNTL 0100 1217 2021 )

பாலமுருகன் … வாதி

..எதிர்..

நீலமேக கண்ணன் … பிரதிவாதி

இந்த வழக்கானது கடந்த 03.06.2022 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K. தங்கதுரை அவர்கள் ஆஜராகியுள்ள நிலையிலும், பிரதிவாதிக்கு நாளிதழ் மூலம் விளம்பரம் செய்யப்பட்டும் பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையிலும், வாதி தரப்பு வழக்கறிஞர் நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், வாதி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**தீர்ப்புரை**

வாதிக்கு, பிரதிவாதியிடமிருந்து ரூ.10,55,333/-ம், அதன் அசல் தொகை ரூ.10,00,000/-ற்கு பிராது தேதி முதல் 12% வட்டியும் கிடைக்க உத்தரவிடக்கோரி வாதியால் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வழக்குரையின் சுருக்கம்**:

வாதியும், பிரதிவாதியும் ஏற்கனவே அறிமுகமானவர்கள். பிரதிவாதி ஒரு தொழில் அதிபர் ஆவார். பிரதிவாதி அவரது அவசிய குடும்பச் செலவுகளின் காரணமாக, வாதியிடம் கடந்த 15.08.2020 ஆம் தேதியன்று அவரது வீட்டில் வைத்து ரூ.10,00,000/- கடனாகப் பெற்றுக்கொண்டு, மேற்படி கடனுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/.க்கு வட்டி ரூ.1/- வீதம் வட்டி செலுத்துவதாகவும், அசலையும், கூடிய வட்டியையும் வாதி வேண்டும்போது வாதியிடம் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு மேற்படி கடனுக்கு ஆதரவாக ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்துள்ளார். ஆனால் ஒப்புக்கொண்டபடி பிரதிவாதி, வாதிக்கு பணத்தை செலுத்தவில்லை. எனவே மேற்படி கடன் தொகையை செலுத்திப்போகும்படி வாதி, பிரதிவாதியிடம் பலமுறை நேரிலும், தொலைபேசி மூலமாகவும் கேட்டதில் பிரதிவாதி கடன் தொகையை செலுத்தாமல் நாள் கடத்தி வந்தார். எனவே

வாதி, கடன் தொகையை கேட்டு கடந்த 03.01.2021 அன்று பிரதிவாதியின் வீட்டிற்கு சென்றுள்ளார். ஆனால் பிரதிவாதி, வாதியின் மீது 05.01.2021 ஆம் தேதியன்று கடையம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். உடன் வாதி, மேற்படி கடையம் காவல்நிலைய ஆய்வாளருக்கு சிவில் சம்பந்தமான பிரச்சனை எனத் தெரிவித்து 11.01.2021 ஆம் தேதியன்று அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேலும், கடன் தொகையை கேட்டு வாதி, பிரதிவாதிக்கு 11.01.2021 ஆம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். மேற்படி அறிவிப்பை பிரதிவாதி 12.01.2021 ஆம் தேதியன்று பெற்றுக்கொண்டு தவறான சங்கதிகள் தெரிவித்து 23.01.2021 அன்று பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். பிரதிவாதிக்கு கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் யாதொரு பலனும் கிடைக்கக் கூடியதில்லை. எனவே, வாதியால் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. வாதியின் வழக்குரையின்பேரில் பிரதிவாதிக்கு நாளிதழ் மூலம் விளம்பரம் செய்யப்பட்டும் பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக தீர்மானிக்கப்பட்டார்.

4. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் யாதெனில்,

1. வாதிக்கு, பிரதிவாதி பிராது தொகையான ரூ.10,55,333/-ம், அதன் அசல் தொகை ரூ.10,00,000/-ற்கு வட்டியும் செலுத்தக் கடமைப்பட்டவரா?

2. வாதிக்கு கிடைக்கக் கூடிய வேறு பரிகாரம் என்ன?

5. இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேலும் ஒரு அப்துல்ரஹிம் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. **பிரச்சனைகள் 1 மற்றும் 2-ற்கான தீர்வு**:

வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், பிரதிவாதி அவரது அவசிய குடும்பச் செலவுகளின் காரணமாக, வாதி அவருக்கு அறிமுகமான நபர் என்பதால், வாதியிடம் கடந்த 15.08.2020 ஆம் தேதியன்று அவரது வீட்டில் வைத்து ரூ.10,00,000/- கடனாகப் பெற்றுக்கொண்டு, மேற்படி கடனுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு வட்டி ரூ.1/- வீதம் வட்டி செலுத்துவதாகவும், அசலையும், கூடிய வட்டியையும் வாதி வேண்டும்போது வாதியிடம் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு மேற்படி கடனுக்கு ஆதரவாக ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்துள்ளார். ஆனால் ஒப்புக்கொண்டபடி பிரதிவாதி, வாதிக்கு பணத்தை செலுத்தவில்லை என்பதால் மேற்படி கடன் தொகையை செலுத்திப்போகும்படி வாதி, பிரதிவாதியிடம் பலமுறை நேரிலும், தொலைபேசி மூலமாகவும் கேட்டதில் பிரதிவாதி கடன் தொகையை செலுத்தாமல் நாள் கடத்தி வந்தார். எனவே வாதி, கடன் தொகையை கேட்டு கடந்த 03.01.2021 அன்று பிரதிவாதியின் வீட்டிற்கு சென்றவுடன் பிரதிவாதி, வாதியின் மீது 05.01.2021 ஆம் தேதியன்று கடையம் காவல்நிலையத்தில் பொய்ப்புகார் கொடுத்துள்ளார். உடன் வாதி, மேற்படி கடையம் காவல்நிலைய ஆய்வாளருக்கு சிவில் சம்பந்தமான பிரச்சனை எனத் தெரிவித்து 11.01.2021 ஆம் தேதியன்று அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேலும், கடன் தொகையை கேட்டு வாதி,

பிரதிவாதிக்கு 11.01.2021 ஆம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். மேற்படி அறிவிப்பை பிரதிவாதி 12.01.2021 ஆம் தேதியன்று பெற்றுக்கொண்டு தவறான சங்கதிகள் தெரிவித்து 23.01.2021 அன்று பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். ஆனால் பிரதிவாதி, வாதிக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகைக்கான அசலையோ, வட்டியோ செலுத்தவில்லை என்பதால், பிரதிவாதி, வாதியிடமிருந்து பெற்ற கடன் தொகையை வட்டி சகிதம் வசூலிக்க ஏதுவாக வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதிட்டிருக்கிறார்.

7. வாதி தரப்பு மேற்படி வாதத்தை நிரூபிக்கும் வகையில் வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டிருக்கிறார். வா.சா.1 அவரது சாட்சியத்தில் வழக்குரை சங்கதிகளை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். வாதிக்கு, பிரதிவாதி பிறப்பித்துக் கொடுத்துள்ள பிராமிசரி நோட்டின் அசலானது வாதி தரப்பில் வா.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சிக் கையெழுத்திட்ட அப்துல்ரஹிம் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்ததில், பிரதிவாதி, வாதியிடம் கடந்த 15.08.2020 அன்று ரூ.10,00,000/- கடனாகப் பெற்றுக்கொண்டு மேற்படி கடன் தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1/- வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு கடனுறுதிசீட்டு ஒன்றை பிறப்பித்துக் கொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது. மேற்படி ஆவணத்தை நிரூபிக்கும் வகையில் அதில் சாட்சிக் கையெழுத்திட்ட நபர்களில் ஒருவரான அப்துல்ரஹிம் என்பவர் வாதி தரப்பில் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், தனக்கு வாதியையும், பிரதிவாதியையும் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக நன்கு தெரியும் என்றும், கடந்த 15.08.2020 தேதியில் பிரதிவாதி, வாதியை அவரது வீட்டில் வைத்து நேரில் சந்தித்து ரூ.10,00,000/- தேவைப்படுவதாக கேட்டுக்கொண்டதாகவும், அதற்கு ரூ.1/- மதிப்பிலான இரண்டு Indian Non-Judicial ஸ்டாம்ப் பேப்பரில் பிரதிவாதி கையொப்பமிட்டு வாதியிடம் கொடுத்ததாகவும், அதில் மாதம் வட்டியாக ரூ.100/-க்கு ரூ.1% வட்டி வீதம் குறிப்பிட்டிருந்ததாகவும் மேற்படி கடனுறுதி ஆவணத்தில் சாட்சியாக தான் கையொப்பம் செய்ததாகவும், மேற்படி பண பரிமாற்றம் பற்றியும், பிரதிவாதி கடனுறுதி ஆவணத்தில் கையொப்பம் செய்ததும் தனக்கு நேரில் தெரியும் என்றும் தெரிவித்திருக்கிறார். மேலும், மேற்படி கடன் தொகையைக் கேட்டு வாதி பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பதும், அதனை பிரதிவாதி பெற்றுக்கொண்டிருக்கிறார் என்பதும் வா.சா.ஆ.2 முதல் 4 ஆவணங்கள் மூலமாகவும் தெரியவருகிறது. மேலும், பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பானது வாதி தரப்பில் வா.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதியின் வழக்குரை சங்கதிகளுக்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதிக்கு நாளிதழ் மூலம் விளம்பரம் செய்யப்பட்டும் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ளார். எனவே மேற்கண்ட வா.சா.1, வா.சா.2 ஆகியோர்களின் சாட்சியங்கள் மற்றும் வா.சா.ஆ.1 ஆவணம் ஆகியவற்றை பரிசீலினை செய்ததின் அடிப்படையில் பார்க்கும்போது, வாதியிடம், பிரதிவாதி கடந்த 15.08.2020 ஆம் தேதியன்று ரூ.10,00,000/-ஐ கடனாகப் பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டினை பிறப்பித்துக் கொடுத்துள்ளார் என்பதும், ஆனால் வா.சா.ஆ.1-ல்

ஒப்புக்கொண்டபடி வாதிக்கு, பிரதிவாதி கடன் தொகையை திருப்பிச் செலுத்தவில்லை என்பதும் தெளிவாகத் தெரியவருகிறது. எனவே வாதி கோரியவாறு பிராது தொகையான ரூ.10,55,333/-ம், அதன் அசல் தொகையான ரூ.10,00,000/-ற்கு வழக்கு தாக்கல் செய்த தேதி முதல் தொகை முழுவதும் செலுத்தும் தேதி வரை 6% வட்டியும் பிரதிவாதியிடமிருந்து வாதிக்கு கிடைக்கக் கூடியது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே பிரச்சனைகள் எண்.1 மற்றும் 2-ற்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, வாதியின் வழக்கு செலவுத்கையுடன் அனுமதிக்கப்பட்டு, வாதிக்கு, பிரதிவாதி ரூ.10,55,333/-ம், அதன் அசல் தொகை ரூ.10,00,000/-ற்கு வழக்கு தாக்கல் செய்த தேதி முதல் தொகை முழுவதும் செலுத்தும் தேதி வரை 6% வட்டியும் சேர்த்து செலுத்த வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்பானது சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தப்பட்டு, 2022 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 17 ஆம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

G ANURADHA Digitally signed by G ANURADHA Date: 2022.06.17 16:01:54 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,

தென்காசி

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| வா.சா.1 | திரு. பாலமுருகன் |
| வா.சா.2 | திரு. அப்துல்ரஹிம் |

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 15.08.2020 | வாதிக்கு, பிரதிவாதி ரூ.10,00,000/- ற்கு பிறப்பித்துக் கொடுத்துள்ள கடனுறுதிச் சீட்டின் அசல் |
| வா.சா.ஆ.2 | 11.01.2021 | வாதி, வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 11.01.2021 | அஞ்சலக ரசீது |
| வா.சா.ஆ.4 | 12.01.2021 | அஞ்சலக ஒப்புகை அட்டை |
| வா.சா.ஆ.5 | 11.01.2021 | வாதி, கடையம் காவல்நிலைய ஆய்வாளருக்கு வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.6 | 11.01.2021 | அஞ்சலக ரசீது |
| வா.சா.ஆ.7 | 12.01.2021 | அஞ்சலக ஒப்புகை அட்டை |
| வா.சா.ஆ.8 | 23.01.2021 | பிரதிவாதி, வாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் பதில் அறிவிப்பு |

G ANURADHA Digitally signed by G ANURADHA Date: 2022.06.17 16:02:06 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,

தென்காசி